யோகாசன ஆலய விஜயம்

மலர் 32 | காளயுக்தி ஆண்டு தைத் திங்கள் January—1979 | இதழ் 1

மிருக மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர்செய் தன்புவைத் துன்னுதை தில்லை
பருகுவர் ஓடுவர் பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவஞ் சேர்ந்துணர்ந் தாரே

முற்பிறவிகளில் இறைவனிடத்து செலுத்திய அன்பின் தொடர்ச்சியினுல் விலங்குகள், மனிதர், உயர்ந்தோர், பறவைகள் மற்றும் அனைத்துயிர்களும் ஒப்பற்ற இறைவனை நினைக்கின்றன. அன்பு செலுத்தாத உயிர்களே இல்லை! மக்களாய்ப் பிறந்தார் இப் பூமியில் பெறும் பெரும்பயனுவது, இறைவனடி தொழுவதே யாகும். தொழுவார் அன்புப் பெருக்கினுல் இன்புற்றிருப்பர்.

— திருமூல ர் .

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 5—00	ரூ. 15—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 150—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	50 காசு	1—25 காசு	ரூ. \ 1—25	ரூ. 2—00

பொன் மொழிகள்

முதலில் ஈசுவரனைத் தேடி, அப்பால் உலகப் பொருளைத் தேடு. இதற்கு மாருகச் செய்யாதே! ஆத்ம ஞானத்தை அடைந்தபிறகு நீ உலக வாழ்க்கையில் பிரவேசித்தால் உனக்கு மனச் சஞ்சலமே இராது —ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர்

சோதனைக் காலங்களிலெல்லாம் கடவுள் என்னைக் காப்பாற்றி இருக்கிருர். 'கடவுள் என்னைக் காப்பாற்றினுர்' என்ற வாக்கியம் என்னைப் பொறுத்தமட்டில் இன்று ஆழ்ந்த பொருள்கொண்டதாக இருக்கிறது. ஆனுல், அந்த வாக்கியத்தின் முழுப்பொருளையும் நான் இன்னும் கண்டறியவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. பரிபூரணமாக அறிய இதைவிடப் பழுத்த அனுபவம் தேவை.

மகாத்மா காந்தியடிகள்.

உயர்திரு கோ மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

பரவெளி கடலுக்குச் சமமானது. சமயங்கள் நதிகளுக்குச் சமமானது. நதிகள் கடலில் சங்கமமானதும் கடலாக மாறுமே யல்லாது நதிகளாயிராது. அதுபோன்று சமய ஆராய்ச்சியில் உள்ளவர்கள் பரவெளியை அடைந்ததும் பரவெளியைக் காணும் வேட்கை கொள்வார்களே அல்லாது சமய வேட்கைக் கொள்ளமாட்டார்கள். திருமதி சாவித்திரி செல்வராஜன்

பௌர்ணமி வகுப்பு

11—2—79 (காளயுக்தி தை 29) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும்.

1. அருள்மிகு மன்னுர்சாமி கோவில், மன்னுர்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை 600 013.
2 சுந்தர விநாயகர் கோவில், சின்ன நத்தம், செங்கல்பட்டு
3, திரு தேவராஜ் இல்லம், 17, வள்ளுவன் தெரு, புரசை, சென்னை-84

அறிவிப்பு!

தாயுமானவர் பாடல் மனனப் பரிசு !

மகரிஷி தாயுமானவர் பாடல்கள் மனனஞ் செய்து பரிசு பெற விரும்புவோர் 12 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் 25, 50 பாடல்களும், ஏனையோர் நூறும் அதற்குமேலாக நூறு நூருக மனனஞ் செய்தவர்கள் 14—4—79ல் நிகழும் தாயுமானவர் திருநாள் விழாவில் கலந்துகொண்டு பரிசு பெறுக! மனனஞ் செய்தோர் பாடல்களின் முதல் வார்த்தைகளைக் கொண்ட பட்டியலைக் கீழ்க்காணும் முகவரிக்கு 15—3—79க்குள் அனுப்பி வைக்கவும்.

முழுப் புத்தகம் (1450 பாடல்கள்) மனனஞ் செய்தோர் 28—2—79க்குள் அறிவிக்கவும்.

C. இராமசுவாமி,
பொதுச் செயலர்,
யோகாசன ஆலயம்,
25, கிருஷ்ணபுரம், சென்னை-94.

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்
திரு. கோ. மு. சுவாமி அவர்கள்
நிகழ்த்திய உரை விளக்கம்.

அத்துவிதம் பெறும்பேறென் றறியாமல், யானெனும்பே
யகந்தை யோடு
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப இன்னமின்னம்
வருந்து வேனே?
சுத்தபரி பூரணமாய், நின்மலராய், அகண்டிதமாய்ச்
சொரூபா னந்தச்
சத்திகணீங் காதவணந் தன்மயமாய், அருள்பழுத்துத்
தழைத்த வொன்றே!

பதவுரை

சுத்த-சுத்த நிலையாகிய, பரிபூரணமாய்-வியாபகமாகி; நின்மல ராய்-நிருமலமாகி; அகண்டிதமாய்-அளவுகடந்ததாகி; சொரூபானந்த சத்திகள்-சொரூபானந்த சத்திகள், நீங்காதவண்ணம்-விலகாதவண் ணம், தன்மயமாய்-தன்மயமாகி, அருள் பழுத்து-திருவருள் கனிந்து, தழைத்த-செழித்த, ஒன்றே!-ஒப்பற்ற பொருளே!, பெறும்பேறு-அடையத்தக்க பலன், அத்துவிதம் என்று-அத்வைதமென்று, அறி யாமல்-ஆராய்ந்துணராமல், யான் என்னும்-நான் என்கின்ற, பேய்-பேய்த்தன்மை பொருந்திய, அகந்தையோடு-அகங்காரத்துடன் கூடி, மத்தம் மதியினர்போல-உன்மத்தம் கொண்டவர்போல, மனம் கிடப்ப-மனமழுந்திக் கிடக்க; இன்னம் இன்னம் வருந்துவேனே? - மேலும் மேலும் துன்பமுறுவேனே? என்க.

கருத்துரை

சுத்த நிலையாம் முழுநிலையாகி, நிருமலமாகி, அளவைக் கடந் ததாகி, சொரூபானந்த சத்திகள் விலகாத தன்மயமாகி, திருவருள் கனிந்து செழித்த ஒப்பற்ற பொருளே! அடையத்தக்கப் பலன்

அத்துவிதமே என்று ஆராய்ந்துணராமல், நான் என்கின்ற பேய்த் தன்மைப் பொருந்திய அகங்காரத்துடன்கூடி உன்மத்தங் கொண்டவர்போல மனம் அழுந்திக் கிடக்க மேலும் மேலும் துன்பம் உறுவேனே? என்பதாகும்.

விரிவுரை

முன் பாடலாகிய "முன்னிலைச் சுட்டொழுதி" என்பதில் சுவாமிகள், நெஞ்சே! அத்துவித மெனப்படும் பெரிய பொருளைச் சரணடைந்தேன். அந்நிலையே சித்தி முத்திகள் வாய்க்கப்பெறும் நன்னிலையாகும். இதுவன்றி நல்ல சுகவாழ்வைத் தரவல்ல நிலை இல்லை என்று சுகர் முதலான பிரம்ம ஞானியர் நாடினர்கள். எனவே என்னிடத்து நின்னிலையைக் காட்டாமல் சும்மா இரு! என நெஞ்சுக்குப் போதனை செய்தார். இப்பாடலில், கிடைத்தற்கரிய பெரும்பேருகிய அத்துவித நிலை எய்தாமல் நானெனும் பேய் அகந்தையோடு வருந்திக் கிடக்கின்றேனே! என நெஞ்சுருகி நிற்கின்றார்.

மௌனப் புதையலுள் கண்டெடுப்பதே பரமாத்மாவாகிய பரம் பொருள்! அப்பொருளில் தன்னை ஒப்படைப்பதே சரணடைதல் அல்லது சரணுகதியாகும். அடிகளார் "சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமதானபர தேவதையை அஞ்சலி செய்குவாம்" என்பார். சரண் புகுந்த நிலையில் அத்துவித நிலையாகும். ஆண்டான் அடிமை, காண்பான், காட்சி என்ற தன்மையற்று, நீ வேறு நான் வேறு என்ற நிலையற்ற அனுபவமாகும். காண்பானும் காட்சியும் கலப்பதே அத்துவிதமெனப்படும் பெரும்பேருகும். இதனை நிர்விகற்ப சமாதி என்பர். அதனின்றும் பிரிந்து மீண்டும் மீண்டும் கலக்க முற்படுவது சவிகற்ப சமாதி எனப்படும்.

இங்ஙனம் உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து இன்புற்றனர் சான்றோர். இந்நிலையே வாழ்க்கையில் பெறுதற்கரிய பேருகும். இத்தகையதொன்றை அறியாமல் கிடக்கின்றேனே! என்பதைத் தாயுமான அடிகளார் "அத்துவிதம் பெறும் பேறு என்று அறியாமல்" என்றனர். அறியாமைக்குக் காரணம் மனதின் வழிச் சென்ற 'யான்' எனும் தன்முனைப்பாகும்.

அந்தக் கரணமெனும் ஆகாத பேய்களெனை
வந்து பிடித்தாட்ட வழக்கோ பராபரமே

என்பார் அடிகளார்.

இப் பேயகந்தை ஒரு விநாடியும் நம்மை (சீவனை) விட்டுவைப்பதில்லை. விடாதவரை அத்துவித நிலையடைதல் என்பது பகற்கனவாகும். திருவருளே இதனைக் கூட்டிவைக்க வேண்டும். திருவருள் கூடினுல் ஆங்கு சாதனையில்லை, மந்திரமில்லை, சாதிப்பானுமில்லை.

தானுன தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனுலும் கற்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்ரும்
ஞானுகா ரத்திரெடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்

ஆனாலும் இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்.

இப்பாடல் தாயுமானாரின் முழு அனுபவமாகும். பட்டினத்து அடிகளாரும் தான் பெற்ற இவ்வனுபவத்தை வருமாறு கூறுகின்றார்.

அட்டாங்க யோகமும் ஆதார மாறும் அவத்தை யைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்று கண்டேன்
விட்டாகிச் செம்ம திப்பா லூறலுண்டு மகிழ்ந் திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்கின் றதே.

இவ்வனுபவம் சுருதிகளுக்கு (நூல்களுக்கு) அப்பாற்பட்டது என்பதை அருணகிரிநாதர் திருப்புகழில் வருமாறு கூறியுள்ளார்.

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுத லொருவாழ்வே
துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய உணராதே;
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவாரி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
சுருதவரி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு மாயஞ்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன தருள்தாராய்;
ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயிர்
உடலுணர்வ தாயெங்கு முற்பனம தாகஅம ருளவோனே
உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுகம்
உதவுமம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா
பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயி லேறுமொரு திறலோனே
பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேநின்ற சுப்ரமணிய யாவமரர் பெருமாளே.

வேதமுங் காணா இவ்வத்துவித நிலையை அடையத் தடையாயிருப்பது மனமே யாகும். மனமுள்ள வரையிலும் இப் பெருநிலையடைய வியலா. எனவே சுவாமிகள் உன்மத்தங்கொண்டவரைப் போல மனம் அழுந்திக் கிடக்க மேன்மேலும் துன்''ழுறுவேனோ? என

"மத்த மதியினர்போல மனங்கிடப்ப இன்ன மின்னம் அழுந்துவேனே" என்கின்றனர்.

மானிடர்க்கு ஆறறிவு கொடுக்கப்பட்டிருந்தும் ஆறுவது அறிவைப் பயன்படுத்தத் தவறிவிடுகின்றனர். அப்போது மக்கள் மாக்களாகி விடுகின்றனர், ஐயறிவு படைத்த மாக்கள் (விலங்குகள்) தம் உயர்ந்த செயலினுல் மக்கள் தன்மை யடைகின்றன.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே"
"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என தொல்காப்பியச் சூத்திரம் எடுத்து மொழிகின்றது.

இராமபாணம் வாலியின் மார்பில் தைத்தபோது இராமனை இழிச் சொற்களால் தாக்குகின்றான் வாலி. அப்போது இராமபிரான் கூறுகின்றார் ; நீ உன் தமபியாகிய சுக்கிரீவன் அடைக்கலம் புகுந்தபோது கொலல முயன்றாய். தம்பி மனைவியாகிய உருமையைக் கவர்ந்து கொண்டாய் என வாலியின் தவறுகளைச் சுட்டிக்காட்டியபோது வாலி, நாங்கள் குரங்கினத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுக்குள் இவ் வேற்றுமை கிடையாது மனம்போன வழியெல்லாம் வாழ்வது எங்கள் இயல்பு என்றான்.

" மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
திணமு நெய்யு மிணங்கிய நேமியாய் "

(வாலிவதைப் படலம்-105)

அப்போது இராமபிரான் சடாயுவைச் சுட்டிக் காட்டுகின்றார் ; இராவணனிடமிருந்து என்னுயிர்க் கினியாளை மீட்க ஜடாயு எனும் கழுகரசன் போரிட்டுச் சிறகறுபட்டு வீழ்ந்தான். விஷ்ணு பக்தனன இந்திரத்யும்நன் எனும் அரசன அகத்திய முனிவனின் சாபத்தால் காட்டில் யானையாகத் திரிந்து கொண்டிருந்தது. அப்போது முற் பிறவியில் விட்டுத்தொடர்ந்த விஷ்ணுபக்தியால் நாள்தோறும் தாமரைத் தடாகத்தினின்றும் 1000 மலர்கொண்டு விஷ்ணு பூசை செய்து வந்தது. ஒரு நாள் தடாகத்தில் இறங்கியதும் ஹூ ஹூ எனும் கந்தருவன (முதலை வடிவில்) காலைக் கௌவிக்கொள்ள ஆதிமூலமே ! என கூவி அழைக்க மகா விஷ்ணு சக்ராயுதத்தால் காப்பாற்றினு ரல்லவா? அதுபோல நீங்களும் சாதாரண விலங்குகளல்லர். சடாயுவைப் போல்வும் கஜேந்திரனைப் போலவும் உயர் பிறவிகள் ! தேவரின் மைந்தர்கள் என்றார்.

" தக்க வின்ன தகாதன வின்னவென்று
ஒக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே "

(வாலிவதைப் படலம்-112)

பிராணிகளைக் காட்டிலும் எல்லா வகையினும் சிறந்த மனிதர்களாயினும் தகுதியுடையவை இவை தகுதியற்றவை இவை என்று நீதி

நூல் முறைமைக்குப் பொருந்த எண்ணுதவர்களானால் மிருகத்துக் கொப்பானவர்களே! மிருகங்களேயாயினும் நீதி நூல்களுள் கூறப்பட்டுள்ள முறைமைகளிற் பொருந்தி நடந்தனவாயின்! தேவர்கட்கு ஒப்பானவையே! என்று எடுத்து மொழிந்தார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்

ஆகிய குறட் பாக்களை ஒப்பு நோக்குக! இங்ஙனம் மனிதப் பிறவி பெற்று மன்னனாக விருந்தும விலங்கினத்தைக் காட்டிலும் இழிந்த செயலைச்செய்த முக்குந்தன என்பானின் கதையை காண்பாம்.

முக்குந்தன் எனும் மன்னன் தன் ஆட்சியின் கீழுள்ள மக்களை நன்கு போற்றி வந்தான். விளைவில் ஆறில் ஒரு பங்கை வரியாகப் பெற்று நாட்டு மக்களுக்கு வேண்டிய வசதிகளனைத்தும் செய்து வந்தான். தெய்வ நம்பிக்கையும் உடையவன். ஒரு நாள் வேட்டையாட கானகம் சென்றான். உடன்வந்த வீரர்களை விடுத்துத் தனியே வனத்துட் புகுந்தான். மாலை நேரமாகிவிட்டது. மாலைக்கண் ஆகையால பார்வை மங்கியது. திகைத்தான்! வேறு வழியின்றி இன்றிரவு மரத்தின்மீதேறி இருந்து கழித்துவிடலாம் என்று விரிந்து படர்ந்திருந்த மரத்திலேறிக் கொண்டான்.

நம் உடலாகிய மரத்தில் புலன்களாகிய ஐந்து கிளைகளில் மனம் எனும குரங்கு தாவிக்கொண்டே இருக்கும். அடி மரத்தில் அதனைக் கட்டிவைக்கவேண்டும். இதுவே யோகமாகும்!

மன்னன் மரக்கிளையின்மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். யோகம் எனும் அரிய கலையை அவன் அறிந்தானில்லை. யோகியர் உறக்கத்திலும் விழித்திருப்பர்! அஃதாவது உணர்வு அயராத நிலையில் யோக நித்திரை புரிவர். "நங்காது உயிருக்கு உயிராகி நின்ற நினையறிந்தே தூங்காமல் தூங்கின் அல்லாதே எனக்குச் சுகமும் உண்டோ!" எனபார் தாயுமான அடிகளார். மன்னன சற்றே கண்ணயர்ந்தான். அந்நேரம் சிங்கம ஒன்று கரடியைத் துரத்திககொண்டு வந்தது. கரடி, மன்னன் படுத்துருந்த மரத்தினமீது தாவி ஏறிக கொணடது. சிங்கத்திற்கு மரமேறத் தெரியாதாகையால கீழ்நின்று ஏமாற்றத்துடன் பார்த்தது. மரததில் சலசலப்பு ஏற்பட்டதால மனனன் விழிததுக்கொண்டான். பக்கத்தில கரடி! அலறிவிட்டான்!

கரடி மனிதனைப்போலவே பேசத் தொடங்கியது. மன்னா! அஞ்சாதீர்! உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன். இவ் வார்த்தையைக் கேட்டதும மன்னனுக்கு அமைதியும் வியப்பும் ஏற்பட்டது. எல்லா உயிரினங்களிலுமுள்ள சீவன் ஒன்றே! உடல் உருவங்களே மாறுபட்டவை. பல யோகிகள் ஞானியர் பல்வேறு உருவங்களில் வாழ்ந்திருக்கின்றனர்! உதாரணமாக புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) என்பார் புலி வடிவத்தில் வாழ்ந்திருந்ததாக வரலாறுகள் பகர்கின்றன. 'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்" என்ற பாடலில், 'மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்" என தாயுமானார் கூறியுள்ளமையுங் காண்க!

மரத்தடியில் நின்ற சிங்கம் மன்னனையும் கரடியையும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. யோகியரும் தம் பார்வையைக் குறிப்பின் மீது பசுமரத்தாணிபோல பார்த்தவண்ணமிருப்பர்! பார்ப்பது துவைதம்! பாராமல் பார்ப்பது அத்துவைதம்! மரத்தின் மீதிருந்த மன்னனும் கரடியும் நீண்டநேரம் விழித்திருந்தனர். சோர்வினால் மன்னனின் கண்கள் உறக்கத்தைத் தழுவின. எனவே கரடி கூறியது; "மன்னா! என் மடிமீது சற்றுநேரம் சாய்ந்து ஓய்வெடுத்துக்கொள்! பிறகு நான் சற்று அயர்கிறேன்," மன்னன் சம்மதித்தான். கரடிமீது சாய்ந்து படுத்தான். உறக்கத்திலாழ்ந்தான். உணர்வு அயர்ந்து உறங்குவது பெத்தர்கள் தூக்கம். உணர்வு அயராது மௌனமெனும் மலரணையில் உறங்குவது முத்தர்களின் தூக்கம்!

வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேல்
கொண்டார்க்கே இன்பங் கொடுப்பாய் பராபரமே என்பர் தாயுமான அடிகளார்.

மன்னனும் கரடியும் உரையாடியதைக் கேட்டும் மன்னன் உறங்கியதையும் பார்த்துக்கொண்டிருந்த சிங்கம், கரடியைக் கேட்டது; கரடியாரே! நாம் இருவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களல்லவா? மனித இனத்தவனுக்கு அடைக்கலம் கொடுத்தாயே! அவன் உன்னைக் கொன்றுவிடுவானே! மெள்ள அவனைக் கீழே தள்ளிவிடு! நான் பார்த்துக்கொள்கிறேன் என்றது, கரடி பதில் கூறியது; சிங்கராஜா! நீ காட்டுக்கு அரசன், இவனோ நாட்டுக்கு அரசன். இவன் உயிரோடு இருந்தால் இந்த நாட்டுக்கு நன்மை. அதுவுமன்றி அடைக்கலம் கேட்டிருக்கின்றான். நீ கூறுவதுபோல செய்தால் துரோகமல்லவா? "அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டா" என்பது பெரியோரின் மொழி அல்லவா? என்றது. சிங்கம் பதில் மொழி கூறியது; நம்மைக் கொல்வதற்காகவே காட்டுக்குள் வந்திருக்கின்றான். இது தெரியாமல் பேசுகிறாயே! எவ்வளவு நேரமானாலும் சரி! உன்னைக் கொல்லாமல் போகமாட்டேன் என்றது.

மன்னன் அரண்மனையில் மலரணைமீது சுகமாகப் பள்ளிகொண்டதுபோல கரடி மடிமீதினின்றும் தூங்கி விழித்தான்! இப்போது கரடி மன்னன் மடிமீது படுத்துக்கொண்டது! சற்றே பொறுத்திருந்த சிங்கம் மன்னனைப் பார்த்துக் கேட்டது; மன்னா! கரடி காட்டு மிருகமல்லவா? நான் சென்றதும் உன்னைக் கொன்று தின்றுவிடுமே! உன் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் கரடியைக் கீழே தள்ளிவிடு! நான் கவனித்துக் கொள்கிறேன் என்றது.

சிங்கம் கூறியதைக்கேட்ட மன்னனுக்கு அச்சம் அதிகரித்தது. சிந்தனையைச் செலுத்தினான். என்ன இருந்தாலும் கரடி காட்டு மிருகம்! சிங்கம் சென்றதும நிச்சயம் நம்மைக் கொன்றேதீரும்! என்று அஞ்சினான்.

சிங்கம் கூறுவதும் நம் நன்மைக்கே என்ற முடிவுக்கு வந்தவன் கரடியைக் கீழே தள்ளிவிட்டான்! கண்மூடி இருந்த கரடி கால்களால் கிளையைப் பற்றித் தொங்கிக் கொண்டது. மன்னனைப் பார்த்து, மன்னா! பகுத்தறிவுடைய மனித குலத்தவன் என்றல்லவோ உன்னைக் கருதினேன்? அதிலும் நாடாளும் மன்னவன்! வேத நூல்களைக் கற்றவன். நாட்டிலுள்ள உயிர்களுக்குத் தாய் போன்றவன்! "மன்னுயிர்

ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை'' என்பதை அறிந்தும் அடைக்கலம் புகுந்தவரைத் தண்டித்தாயே! உன்னைப்போல துரோகி இவ்வுலகிலேயே இருக்க முடியாது நான் யார் தெரியுமா? சனகாட்டு முனிவன்! இச் சரீரத்திற்குப் பாப விமோசனம் ஆகும் நேரத்தில் தீங்கிழைத்தாயே! இக்கணமே நீ பித்துப் பிடித்து அலைவாய்! என சபித்தது.

சனகாட்டு முனிவனாகிய கரடி சிங்கத்தைப் பார்த்து கூறத் தொடங்கியது; முற்பிறவியில் நீ குபேர வம்சத்தில் பிறந்து வாழ்ந்தாய். நீயும் உன் மனைவியும் இமயமலைச் சாரலில் நீராடிக்கொண்டிருந்த போது, கௌதமராகிய மாமுனிவர் வேள்விக்கான சமித்துச் சேமிக்க அவ்வழி வந்தார். உன் மனைவி அவரின் வருகையை அறிந்து ஆடைகளை எடுத்து உடுத்திக்கொண்டாள். நீயோ நிர்வாணமாக நின்று அவரை அவமதித்தாய்! வெகுண்ட அவர் இட்ட சாபத்தாலேயே இம் மிருக உடல் உனக்குக் கிடைத்தது! சனகாட்டு முனிவர் கரடி வடிவத்தில் வந்து உனக்குச் சாப விமோசனம் அளிப்பார் என்று அவர் கூறியது உன் நினைவில் இல்லை போலும்! என்றது. சிங்கம் சிந்திக்கத் தலைப்பட்டது! நான் யார்? நான் யார்? என கேள்விக் கணை தொடுத்தது! முன்னை வடிவம் கிடைக்கப் பெற்று குபேந்திரனிடம் சேர்ந்தது. மன்னன் பித்துப் பிடித்து அலைந்தான்.

நாமும் நம் முற்பிறவிகளின் நினைவுகளை மறந்தே இருக்கின்றோம். தெளிந்து பிறவி யறுக்க மருந்துண்டு! "பித்தந் தெளிய மருந்துண்டு!" "நல்ல மருந்திம் மருந்து சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து'' எனவும், "பிறந்துவிட்டால் இறவாதிருக்க மருந்துண்டு'' என்றெல்லாம் நம் முன்னோர்களான ஞானியரின் அருள் வாக்குகள் நமக்குத் துணை நிற்கின்றன. ஐந்தெழுத்தை இடையறுமல் ஜெபித்துச் ஜெபித்துத் தெளிவு பெற்றோர் எண்ணிலடங்கார்! நாமும் அதனைப் போற்றித் பயன் துய்ப்போமாக!

மேற்கூறிய கதையினின்றும் மனிதனாகப் பிறந்தும் மிருகத்தினும் இழிச் செயல் புரிந்ததையும், மிருகமாகப் பிறந்தும் அருஞ்செயல்புரிந்த வாற்றையுங் கண்டோம். மனோ வழிச் சென்று அறிவை மந்தப்படுத்தியமையே மன்னன் இழிச்செயல் புரிந்தமைக்குக் காரணம்! கரடி மனோவழிச் செல்லாது அறிவுவழி நின்றதே உயர்வெய்தியமைக்குக் காரணமாகும். தாயுமானூர் மனோவழிச் சென்று அறிவு மயங்கி துன்புற்றிருப்பது இனி எத்துணைக் காலமோ? என இப்பாடலில், சுத்தபரிபூரணமாய்த் திகழும் பரம்பொருளைக் கேட்கின்றுர்.

இறைவன் மாசற்றவன்! எனவே மாசற்ற அன்பர் நெஞ்சத்தையே கோயிலாகக் கொண்டுள்ளான்!

மாசற்ற அருள்நெஞ்சே மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையுங் காண்பேனே

என்பார் அடிகளார், எனவே, "சுத்தபரி பூரணமாய், நின்மலராய், அகண்டிதமாய்ச் சொருபானந்தச் சத்திகள் நீங்காதவண்ணம் தன்மயமாய் அருள்பழுத்துத் தழைத்த ஒன்றே'' என இப்பாடலில் கூறியுள்ளார்.

ஆணவம், கன்மம், காமியம் எனப்படும் மும்மலங்களைச் சுத்தம் செய்தால் அல்லது அறச் செய்தால் ஏகாந்தவெளி யனுபவம் கிட்டும்!

இம் மூன்று மலங்களுக்கும் பிறப்பிடம் மனமே யாதலால் அதனை அகற்றும்வழி அண்ணுந்து பார்த்தலாகும்.

பண்ணுகுங் காமம் பயிலும் வசனமும்
விண்ணும் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணும் உடலிற் பொருந்து மனத்தையும்
அண்ணுந்து பார்க்க அழியும் உடம்பே.

இந்தப் பார்வையை அளிப்பவர் ஆசாரியரே ஆவார். இப் பார்வையால் பார்க்கப் பார்க்கச் சக்திகள் அனைத்தும் ஒன்றுகூடும். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, பராசக்தி, மாமாயை திரோதான சக்தி, சிவசக்தி என சக்திகள் பல மனத்தினின்றும் எழும் எண்ணங்களை ஐந்தெழுத்தின் வழியாகத் திருப்பி ஒன்றுபடுத்தி குருப் பார்வையால் பார்த்திட வெளியாகவும் ஒளியாகவும் ஒளிகலந்த வெளியாகவும் அனுபவம் கிட்டும்!

இருப்பாய் இருந்திடப்பே ரின்பவெளிக்கே நமக்குக்
குருப்பார்வை யல்லாமற் கூடக்கி டைத்திடுமோ
அருட்பாய் நமக்காக ஆளவந்தார் பொன்னடிக்கீழ்
மருட்பேயர் போலிருக்க வாகண்டாய் வஞ்சநெஞ்சே

என்பது தாயுமான அடிகளாரின் தெளிந்த விளக்கமன்றோ?

வயல்களில் உள்ள எலிகளைப் பாம்புகள் விழுங்குவதுபோன்று உணர்வாகிய பார்புக்கு சித்தவிருத்திகளாகிய எலிகளை உணவாக இடுதல் வேண்டும்! அல்லது வேள்விச் சாலையில் சாமகிரியைகளை இடுவதுபோல உணர்வைப் பிரம்ம தீக்குள் இடவேண்டும்! தீயை மூட்டுபவர் குருவேயாதலால் அவர் அளிக்கும் மறை மொழியாகிய ஒரு மொழியை மலையிலக்காகக் கொள்ளல் வேண்டும். “மற்றெனக்கையநீ சொன்ன ஒரு வார்த்தையினை மலையிலக்கென நம்பினேன் மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன் மரபில்வரும் மௌன குருவே” என்று அடிகளார் உறுதியாகப் பற்றினர்.

ஆக இப்பாடலில் அடிகளாரின் வேண்டுதலாவது, திருவருள் கனிந்து செழித்த பரம்பொருளே! இப் பிறவியினுல் அடையத்தக்கப் பலன் அத்துவிதநிலை யடைவதே என அறிந்துகொள்ளாமல் யான் எனும் அகந்தைகொண்டு மனம் கிடந்துழல அறிவு மயங்கி இருப்பது இன்னும் எத்துணைக் காலம் ஐயா என நெஞ்சுருகுகின்றார்.

பிறந்தநாள் வாழ்த்து!

யோகாசன ஆலய விருதுநகர் கிளை ஆதரவாளர்களான மகிழ்ச்சி அச்சகம் சதானந்தம்—திலகவதியாரின் பெயரனும், மகிழ்ச்சி சந்தோஷ்குமார் B.E.—மல்லிகாவின் மைந்தனுமான செல்வன் மகிழ்ச்சி சுகர்கணேஷ்- மற்றும் மகிழ்ச்சி உல்லாஸ்குமார் M.A.,—கனகாவின் மைந்தன் செல்வன் மகிழ்ச்சி உகர்கண்ணன் இவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ‘யோகாசன ஆலய விஜயம்’ வளர்ச்சிக்கு நன்கொடை நல்கி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். திருமதி மல்லிகா சந்தோஷ்குமார் ஸ்ரீ அம்பாள் ராமசாமி அவர்கள் மகளாவார் இக் குடும்பத்தினர் யோகாசன ஆலய விஜயத்தின்பால் நாட்டம் மிக உடையோராவர். எல்லா செல்வங்களும் நலனும் பெற்று நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangaswami's

A great exponent of Yagasanas

By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

MAYURASANA—Peacok Pose

Mayurasana: Spread a carpet on floor. Kneel yourself on the carpet. Sit on your heels. Place your palms on the carpet closer to your knees in such a way the small fingers of the two hands are closer to each other. The fingers should be facing the knees. Place the elbows in a balanced form on the stomach just below the ribs. Control your breath and place the entire weight of the body on the elbows by bending the body as well as the elbow accordingly. At the same time stretch your legs together without bending it from head to foot it must be in a straight line. The entire weight of the body rests on the palms in support of the balanced position of the elbows. Raise your chin and see at a distance. This is the pose of a peacock or Mayurasana. As long as a man in this position he should control his breath. Then he has to release the breathing gradually.

At first a beginner cannot raise his legs together and keep the entire body except hands to be on parallel with the floor. Try this asana with patience daily for a few seconds.

Before we discuss the nature of body while doing Mayurasana, let us know how the food particles are digested and absorbed by blood and circulated to muscles, nerves, bones, lungs, heart, cesophagus, liver, spleen, pancreas, intestines, kidneys etc. etc , and how fhey are strengthened and activated and how they excrete the wastes of our body, such as motion, urine, sweat phlegm, bile and soon.

We know perfectly well that the diet we take daily is to restore the energy lost. The Metabolic activities of anabolism and catabolism will continue if at all we do or don't practise yogasanas. If it stops doing the Metabolic activities there ends the life of man. Our biological activities based on this in and out (anabolism and catabolism) processes, Alimentary canal runs from month to anus. The inner walls of the alimentary caual covered with a tiny membrane and slimy substance. The outer wall is for several blood vessels and nerves. Blood vessels produce the slimy substance mucus which sticks to the membra e made out of epithelial tissues. It acts like a lubricant inside the alimentary canal. Due to this, food particels without any obstruction reaches the stomach from the mouth through cesophagus. With the process of contraction and expansion in the stomach food is

made as Chyme. This chyme is passed on to the intestine through dueodenum. Absorption takes place through villii. The waste products are removed through rectum.

Food that pass through the alimentary canal digested and the same is carried through out the body by blood circulation. For proper digestion enzymes are produced. For example in the mouth with the help of tongue food is chewed, food is masticated by our teeth. We have salivary glands which produces saliva. Food contains carbohydrates, protein, fat, minerals and vitamins. With the help of saliva starch body or carbohydrate is digested. Similarly pancreas, liver, spleen, intestinc etc., secrate different juice which helps to digest food. So also there are many enzymes like peptin, renin, invertase, maltase, zymase etc , acts on food and digest protein and fat contents But the above organs and its secretions when reduced due to old age or weakness, many complications will arise. If blood is not pure and carries the poisonous matter of spleen to the different parts of body, many organs could not function properly.

Now let us see what happens when we do Mayurasana. Both the elbows are kept on the stomach in a balanced form. The entire body rests on the four hands in support of the palms together. On account of this stomach, liver, gall blaer, intestine, pancreas, spleen, kidneys etc., are pressed well. Pulsatory vessels functions more actively and pure blood is circulated to these organs. Because of this extra energy they secrete more and more gastric juices. This result in the abnormal digestive power. At the same time all the absord matter is circulated to those organs by circulation, which causes m re and more energy and they are strengthened. Due to this we get full resistance against diseases if any and controls the body free from all diseases. This power is made possible because by doing this asana it gives giant power to the digestive organs to digest even poisonous matter.

In general to gain happy and comfortable life one has to do many asanas but by doing Mayurasana; in particular he could live even upto hundred years free from diseases with full spirit and stamina as a youth do many more good in his life.

அர்ச்சகர்கள் மாநாட்டில் அமைப்பாளர்

20—12—78-ம் நாள். சென்னை, தர்மபிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்ற தென்னிந்திய அர்ச்சகர்கள் மாநாட்டில், யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இந்து அறநிலைய துணை ஆணையாளர், திருவேற்காடு கருமாரியம்மன் கோவில் பெரியவர் இராமதாசர், அர்ச்சகர் சங்கத் தலைவர், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் அதிகாரி மற்றும் பலர் உரையாற்றினர்கள்.

பதார்த்த குண போதினி

மூலிகை குணனுபவத்தை விளக்கும் சிறந்த நூல்

வைத்திய ரத்தினம் வி. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.
(மாவட்ட நீதிபதி ஓய்வு)

வேப்பமரம் (வேம்பு):—இதன் பட்டையை கஷாயம் செய்து காலையில் பிரதி தினமும் சாப்பிட காயம் வலுக்கும். ஆயுள் பெருகும். இதன் இலைகளை மஞ்சள் கூட்டி அரைத்து வைசூரி புண்களுக்குத் தடவ குணமாகும். புட்டாலம்மைக்கு மேற்பூச்சாகப் பூசலாம். ஆருப் புண்களில் வைத்துக் கட்டுவதுண்டு. பட்டை கஷாயம் மதுமேகத்தை நீக்கும். இதன் 'பூ' சாப்பிட பித்தாதிக்கம் தணியும். மரங்களிலேயே இது உயர்ந்ததென சாத்திரங்கள் சொல்கின்றன.

மலைவேம்பு:—இதனுடைய பட்டை கஷாயம் மலட்டை நீக்கும். சந்தானமுண்டாகும்.

வெட்பாலை;—இதனுடைய இலையை மென்ருல் மிளகாய் மென்வதுபோலிருக்கும். ஆனல் பல்லிலுள்ள பூச்சிகளை உடனே கொல்லும். இதனுடைய விதைகள் அதிசார பேதி, சீத ரத்த பேதிகளை குணப்படுத்தும்.

பூவரசன்:—இதன் பட்டை குஷ்டத்தைப் போக்கும். அதன் பட்டையை தேங்காயெண்ணையில் ஊறவைத்து வெயிலில் 1 வாரம் வைத்து சிரங்கு, சொறிகளுக்குப் பூச விரைவில் குணம் தரும்.

முருங்கை:—இதனுடைய பட்டை, கடுகு, பூண்டுடன் சேர்த்தரைத்துச் சுடவைத்து வாத வீக்கங்களுக்குப்போட சீக்கிரத்தில் வீக்கம் குறையும், குழம்பாக செய்து சாதத்தில் கலந்து சாப்பிட வாத நோய்கள் குணமாகும்.

இதன் இலையுடன் எள்ளும் பிண்ணுக்கும் சேர்த்துக் கொஞ்சம் பூண்டு சேர்த்து கறி செய்து சாதத்துடன கலந்து அடிக்கடி சாப்பிட நீரிழிவு என்னும் அதிமூத்திரம் குணம் ஆகும்.

இதனுடைய பிசின் சுக்கிலத்தைக் கட்டும். பூவை பசும்பாலிலிட்டு காய்ச்சி சாப்பிட விந்திறுகும். இதன் வேர்ப்பட்டை நாகத்தைக் கட்டும்.

முருக்கன் (முள் முருக்கன்):—இதில் வெள்ளைப்பூ பூக்கும். மரத்தின் பட்டை, இலை உயர்ந்தது.

குஷ்டம், சரும நோயுள்ளவர்கள் இதன் இலைகள் மூன்று எடுத்து அரைத்து அதிகாலையில் பச்சை தண்ணீரில் குளித்துவிட்டு 10 நாட்கள் சாப்பிடவும். உப்பில்லா பத்தியம் இருக்கவும். மேக வியாதிகள் குணமாகும்.

வேலமரம்:—இதன் பிசின் நீரிழிவு நோயைப் போக்கும்; விந்து கட்டும்.

சரக்கொன்றை:—வெள்வங்கம் உருக்கி இதன் இலைகளைப்போட்டு தேய்த்துவர வங்கம் அருமையான பற்பமாகும்.

அரசன்:—இதன் துளிர்களின் சாற்றில் பாதரசம் கட்டும். இதன் பட்டையை இடித்து தென்னங் கள்ளில் போட்டு ஒருவாரம் வெயிலில் வைத்தெடுத்து புற்றுநோய் புண்களில்போட புழுக்கள் செத்து குணமாகும். இதன் பட்டையில் வெள்வங்கம் பற்பமாகும்.




The marriage of Selvan HARSHAD N. PATEL (s/o Late Narshibhai Patel and Brother of Arunkumar N. Patel, Secretary and Publisher of Yogasana Alaya Vijayam and brother of Remesh bhai N. Patel, B.Sc., B.L ,) with Selvi REKHA (daughter of Bhailal Bhai Patel now at London) was performed on 19—11—78 at Nadiad (Gujarat State) which was largely attended by the elite of the people, Blessing the couple, with greetings presents both n kind and coins.

To Felicitate the couple a grand reception was arranged at Jain Bhuvan at Madras on 30—12—78, under the Immediate and August presence of His Excellency Shri Prabhudas Patwari Governor of Tamil Nadu and Sri G. M. Swamy, founder and President & Yogasana Alayam. With to the full complement and also the cream of Society of the City who Blessed Couple. With peace plenty prosperity and longevity. We are overwhelmed at the grand great response shown by one and all at the function We thank them sincereiy and this is to be treted as and individual acknowledgment and thanks.

Mr. & Mrs. ARUNKUMAR N. PATEL
Mr. & Mrs. REMESH BHAI PATEL.

யோகாசன ஆலய 39ஆம் ஆண்டு விழா



14—1—79 ஞாயிறு மாலை 5 மணிக்குச் சென்னை வண்ணையம்பதி நல்லதம்பி சேதுராமன் மண்டபத்தில் யோகாசன ஆலய 39ம் ஆண்டு விழா நடைபெற்றது. தென்சென்னை செயலர் திரு. T. S. கலியாண சுந்தரம் அனைவரையும் வரவேற்றார். உயர்திரு O. ஆனந்தராம் I. R. S. (Inspecting Assistant Commissioner, Incometax - Department) அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் உரையாற்றியதன் சுருக்கம் வருமாறு; நான் வாழ்ந்த இப் பேட்டையில் நடைபெறும் இவ் விழாவுக்குத் தலைமை வகிப்பதில் பெருமகிழ்ச்சி எய்துகின்றேன். நமக்குளிருக்கும் அன்னமய கோசம் முதலான பஞ்ச கோசங்களுள் ஆனந்தமய கோசமே நமக்குப் பேரின்பம் தரவல்லது. இதையறிந்த இராமகிருஷ்ண பரமஹம்ஸர், அரவிந்தர் போன்றோரெல்லாம் தாம் இன்பம் எய்தியதோடு உலக மக்களும் அடைய வேண்டுமென எண்ணினர். இப்படிப்பட்ட அரிய பயிற்சியை யோகாசன ஆலயம் அளித்துவருவது நாம் பெற்ற பெரும்பயனேயாகும். நாமும் ஈடுபட்டுப் பலரையும் ஈடுபடச் செய்து நன்மை யடைவோமாக! என்றனர்.

யோகாசன ஆலய அங்கத்தினர்கள் முருகவேள், குமாரசாமி, கார்த்திகேயன், செந்தில்நாதன், செல்வி வத்சலா, M. அழகேஸ்வரி, J. சரஸ்வதி ஆகியோர் யோகாசனங்கள் செய்தனர். திரு. E. வேதாசலம் அவர்கள் நன்மைகளை விளக்கினார்கள்.

தொழிலதிபர் உயர்திரு P. M. பிச்சை செட்டியார் அவர்கள் ஓங்காரக் கொடி ஏற்றிவைத்து உரையாற்றியதாவது; 25 ஆண்டுகட்கு முன் நான் பழகிய யோகாசனப் பயிற்சியை இடையில் சூழ்நிலை காரணமாக விட்டு மீண்டும் தொடர்ந்திருக்கின்றேன். தேவையற்றவைக்கெல்லாம் நேரத்தை வீணாக்காமல் நோயற்ற வாழ்வு தரும் இக்கலையைப் பயின்று இன்புற்றிருப்போம் என்றனர்.

இந்து அறநிலையத் துறை துணை ஆணையர் உயர்திரு R. அர்ச்சுனன் B.A., அவர்கள் விழாவில் சிறப்புரை நிகழ்த்தினார்கள். சுருக்கம் வருமாறு;

யோகாசனங்களுக்கும் தேவாலயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இக் கலை மேலை நாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்டதன்று! வேதங்கள் ஆகமங்கள் அனைத்தும் நமக்கு விளக்கம் தருகின்றன, யோக அங்கங்கள் எட்டனுள் யோகாசனம் மூன்றாவது அங்கமாகும். திருமூலரின் திருமந்திரத்தில் எட்டு அங்கங்களையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றைக் கைக்கொண்டொழுகினால் எண்வகைச் சித்திகள் நம்மை நாடிவரும். இவையும் அருள்நெறிக்குப் பயன்படா! இவையும் கடந்து எட்டாவது அங்கமான சமாதி நிலைக்குச் செல்லுதல் வேண்டும். நமக்குள் ஆராய்ச்சி செய்து நம் தத்துவ முறைமைகளை அறிந்தால் நாமே தெய்வமாகலாம். இதற்கு அடிகோலியாக யோகாசன ஆலயம் புறக்கருவி அகக்கருவிகளைப் பலப்படுத்தும் அரிய பயிற்சிகளை அளித்து வருவது மிகவும் போற்றத்தக்கது எனவும், உடல் தத்துவம் மனோ தத்துவங்களை மிக விரிவாக எடுத்து விளக்கினார்.

அடுத்து யோகாசன ஆலய பிரசாரகரும் மகளிர் பிரிவின் செயலருமாகிய செல்வி R. சாந்தி B.Sc., அவர்கள் எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியின் பயனை எடுத்து மொழிந்து சிறப்புரையாற்றனார். யோகாசன ஆலய துணைப் பொதுச் செயலர் திரு. ப. முருகேச பாண்டியன் நன்றி நவில பிரார்த்தனையுடன் விழா நிறைவுற்றது.

விழா தொடக்கத்தில் 4 மணிமுதல் புலவர் திரு. பா. ஆழ்வார் (யோகாசன ஆலய விஜயம் ஆசிரியர்) அவர்கள் அருளிசை வழங்கினார்கள்.

திருமதி ராணி சந்திரசேகரன் அவர்கள், தாயுமானவர் பாடல் பராபரக் கண்ணிகள் 100 கொண்ட புத்தகங்கள் 1000 நன்கொடை வழங்கினர்

மார்கழித் திங்கள் வழிபாட்டு நிறைவு விழா

சென்னை வண்ணையம்பதி அருள்மிகு கோதண்டராமர் கோவிலில் 16—12—78ல் தொடங்கிய மா, தி. வழிபாடு, 13—1—79 அன்று 'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்களின் 'தூணி போற்றும் தாயுமானர்' இசையும் கதையும் நிகழ்ச்சியோடு விழா செயலர் திருவாளர் S. K. மலைக்கனி அவர்கள் நன்றி நவில நிறைவு பெற்றது.

இசை நிகழ்ச்சி வழங்கியவர்கள்: திருமதிகள் இந்திரா இராஜேந்திரன், ஞானம் & காளீஸ்வரி, சகோதரிகள் ராதா & பிரபா, குமாரி R. பத்மா & உமா மகேஸ்வரி, சாரதா சந்திரபாலன், A. கஸ்தூரி & ஞானம், திருவாளர்கள் புலவர் பா. ஆழ்வார், பழநியாண்டவர் சத்சங்கம் (தென்னக ரயில்பெட்டித் தொழிலாளர்கள்) பெ. கணேசன், சிட்டிபாபு, இராம லக்குமண சகோதரர்கள், செல்வன் சேஷாத்திரி, 'இசைச் செல்வன்' பெங்களூர் B. J. மாதவன், மற்றும் யோகாசன ஆலய இசைப் பிரிவினர் ஆகியோர்.

சிறப்புரை நிகழ்த்தியோர்; திருவாளர்கள் பி. வெங்கடேசன், N குருலிங்கம், V. A. மகங்குராஜ், புலவர் பா. ஆழ்வார், J. ஹரிஹர கிருஷ்ணன், முருகேச பாண்டியன் B.E., செல்வி R. சாந்தி B.Sc., திருமதிகள் M. வசுந்தராதேவி, இராஜம்மாள் நரசிம்மலு, ஒ. இராஜம்மாள் ஆகியோர்..

நாள்தோறும் விடியற்காலை 5-30 மணிக்கு பிரசாரகர் R. சாந்தி B.Sc., அவர்கள் திருப்பாவை, திருவெம்பாவை மற்றும் பக்திப் பனுவல் பாடினுர்கள்.

சிறப்புப் பணிபுரிந்த திருவாளர் சாரங்கன், செல்வி வத்ஸலா, மோகனு, அழகேஸ்வரி ஆகியோருக்கு யோ. ஆ. துணைத் தலைவர் A. S. ஆதிநாராயணன் அவர்கள் பரிசுகள் வழங்கினுர். நன் கொடைகள் நல்கியும், உடனுறைந்து தொண்டாற்றியும் விழாவினைச் சிறப்புறச் செய்த அனைத்து அன்பர்களுக்கும் மா, தி வ. விழாக் குழு வின் சார்பாக அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

S. இராஜம்மாள் (தலைவர், விழாக்குழு)

S. K. மலைக்கனி. செயலர் விழாக்குழு

மார்கழிச் செவ்வாய் சிறப்புக்கூட்டங்கள்

சென்னை வண்ணையம்பதி பேரம்பாலு செட்டி தெரு அருள்மிகு கோதண்டராமர் கோவிலில் கிளையின் சார்பாக மார்கழித் திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் (1978 டிசம்பர் 19, 26, 1979 ஜனவரி 2, 9) இரவு 6-30 மணிக்கு சிறப்புக்கூட்டங்கள் நடைபெற்றன. முதல் கூட்டத்திற்குச் சென்னை முருக தனுஷ்கோடி மகளிர் மேல் நிலைப்பள்ளி யின் தலைமையாசிரியை திருமதி ஞான சவுந்தரி M A., B.T. அவர்கள் தலைமை வகித்தனர். யோகாசன ஆலய மகளிர் பிரிவு துணைச்செயலர் திருமதி M. வசுந்தராதேவி அவர்கள் "தாயுமானவரும் திருமூலரும்" எனும் பொருளில் சிறப்புரையாற்றினுர்.

26—12—78 அன்று யோகாசன ஆலய தலைவர் உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்களும், 2—1—79 அன்று திருக்குறள். வி. சங்கரன் செட்டியார் அவர்களும், 9—1—79 அன்று, டாக்டர் ஔவை. து நடராசன் (தமிழ் நாட்டு அரசு, மொழிபெயர்ப்புத்துறை இயக்குனர்) அவர்களும் தலைமைவகித்தனர். இம் மூன்று நாள்களிலும் யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள், முறையே 'தாயுமானவரும் வள்ளலாரும்' 'தாயுமானவரும் திருவள்ளு வரும்' 'தாயுமானவரும் பட்டினத்தாரும்' ஆகிய தலைப்புகளில் சிறப்புரை நிகழ்த்தினுர்கள்.

ஷ நிகழ்ச்சிகளில் யோ. ஆ. மகளிர் இசைக்குழுவினர், செல்வி R. சாந்தி B.Sc., இரட்டையர் இராம லக்குமணர், ஆகியோர் இசைவிருந்தளித்தனர். R. ராஜேந்திரன், S. K. மலைக்கனி திருமதி. கௌரி ஜீவானந்தம், திரு. S. முருகேசபாண்டியன் B.E., வரவேற்புரை யும் செல்வி R. சாந்தி B.Sc., புலவர். பா. ஆழ்வார் நன்றியுரையும் கூறினர்.

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி நள்ளிரவு நிகழ்ச்சி!

ஷ கோதண்டராமர் கோவிலில், 9—1—79 ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு இரவு 9 முதல் 2 மணி வரை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யோகாசன ஆலய துணைத்தலைவர் உயர்திரு. A. S. ஆதிநாராயணன் அவர்கள் தலைமை வகித்தார்கள், யோ. ஆ. இசைப் பிரிவு செயலர் V. மாரிமுத்து இராம லக்குமண சகோதரர்கள், மகளிர் இசைப்பிரிவினர் ஆகியோரின் இசை நிகழ்ச்சிக்குப்பின்னர் நள்ளிரவு

12 முதல் 2 மணி வரை 'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்களால் 'வாலி வதைப்படலம்' கம்பராமாயண இசையும் கதையும் நிகழ்ந்தது.

திருமதி வசுந்தரா முருகேச பாண்டியன் வரவேற்பும் திருவாளர் S. K. மலைக்கனி நன்றியும் நவின்றனர். இந்நிகழ்ச்சி திருமதி. கஸ்தூரி ஆதிநாராயணன் அவர்கள் நன்கொடையால் நிகழ்ந்தது.

யோகாசன ஆலயக் கட்டிடக் குழு அழைப்பு !

விருதுநகர்.

யோகாசன ஆலய விருதுநகர் நிருவாகக் குழுக்கூட்டம் 24—12—78 அன்று நடைபெற்றது. விருதுநகரில் யோகாசன ஆலயக்கட்டிடம் நிறுவுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கட்டிடக்குழு கன்வீனராக உயர்திரு T. M. M. ராஜாக்கனி நாடார் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களிடம் ரூபாய் ஆயிரத் தொன்று யோ. ஆ. ஆண்கள் பிரிவின் சார்பாக நிதிவழங்கப்பட்டது.

M. P. A. S. நடராஜன், செயலர்.
விருதுநகர்.

அன்பர் கடிதம்

அன்புடையீர் வணக்கம் !

யோகாசன ஆலய விஜயம் சந்தாதாரர் N. K. மூர்த்தி எழுதும் கடிதம், கூடிய சீக்கிரம் ஆயுள் சந்தாதாரராக சேர்ந்து கொள்ள இருக்கிறேன். இக்காலச் சூழ்நிலையில் அனுபவ, தவதத்துவ ஞானிகளின் கருத்துக்களை எளிதில் உணரும்படி மிக எளிய நடைமுறையில் எடுத்துக்கூறும் திரு. கோ. மு. சுவாமி அவர்கள் நீண்டகாலம் இவ்வுலகில் இருந்து அருட்தொண்டு செய்து எல்லோருக்கும் 'யோகாசன ஆலய விஜயம்' விஜயம் செய்து கொண்டே இருக்கவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்கிறேன். வள்ளல் பெருமானின் திருவருட்பா மேலும், தாயுமானுர் அடிகளின் பாடல்களின் மேலும் அளவுகடந்த பிரியமும், ஆராய்ச்சியும் உள்ளவன்.

அன்புள்ள N. கலியமூர்த்தி,
நெட்டஞு அஞ்சல்
கருநாடக மாநிலம்.

அநுதாபச் செய்தி !

யோகாசன ஆலய விருதுநகர் நிருவாகக்குழு உறுப்பினர் உயர்திரு. P. A. A. மாணிக்கவாசக நாடார் அவர்களின் குமாரர் திரு. கனகவேல் அவர்கள் 23—12—78 சனிக்கிழமை காலை 1-30 மணிக்கு இயற்கை எய்தினுர்கள். யோகாசனுலய விருதுநகர் அன்பர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். பிரிவுத்துயர்படும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அநுதாபச்செய்தி அனுப்பப்பட்டது.

—ஆசிரியர்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்(து) எய்தும் பராபரமே—தாயுமானவர்

யோகாசன ஆலயம்

நிறுவியது 1941 பதிவானது

1978-ம் ஆண்டு அறிக்கை

ஆலயப் பணி

“எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே” என்ற அருளரசர் தாயுமானவரின் அருள்வாக்கின் வழிநின்று, யோகாசன ஆலயம் இந்து தருமத்தின் இணையற்ற பெருமையினை அனைவரும் உணரும் வகையில் ஞானச் செல்வத்தை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து, மக்களிடையே தூய்மையான சமரச உணர்ச்சியை உண்டுபண்ணி. பின்வரும் ஆறு சீரிய கொள்கைகளைக் கடைப்பிடித்து அறப்பணி ஆற்றி வருகின்றது.

கொள்கைகள்

1. கடவுள் சிவமயம், நிட்களம், நிர்க்குணம், நிராலம்பம், நிர்விஷயம், விஷ்ணுமயமாய் இருப்பவர்.
2. சகல உண்மை அறிவிற்கும், அவ்வறிவால் அறியப்படுகின்ற அனுபவத்திற்கும் மூல காரணமாய் இருப்பவரே ஈஸ்வரர்.
3. தெளிந்த அறிவே வேதம் எனப்படுவது; வேதத்தை அறிதல் அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தினரின் கடமை.
4. ஆத்ம சம்பந்தமாகவும், சரீர சம்பந்தமாகவும் பண்டைய வேத தருமத்தைக் காப்பதே இவ்வாலய அங்கத்தினரின் முக்கிய கடமை.
5. எல்லோரிடத்திலும் அன்போடும், நியாயத்தோடும் தகுந்த மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.
6. கொலை, களவு, கள், காமம், கோபம் இவைகளை விலக்குதல்.

மகரிஷி தாயுமானவர் நூல்

ஆத்ம சம்பந்தமாகவும் சரீர சம்பந்தமாகவும் இறைநெறியில் ஈடுபட்டுத் தொண்டாற்றுவதற்கு இவ்வாலயம் மாமுனிவர் தாயுமானவரின் நூலை ஆதாரமாகவும் வழிகாட்டியாகவும் கொண்டுள்ளது. தாயுமானவர் பாடல்களை இடைவிடாது ஆராய்ந்து உணர்பவரின் உள்ளம் தூய்மையடையும் எனவே, அனைவரும் இவ்வருட் பாடல்களை மனனம் செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பறைசாற்றியும், அவ்வாறு மனனம் செய்தவர்களை ஆண்டுதோறும் சித்திரை முதல்நாளன்று நிகழும் தாயுமானவர் திருநாளில் பரிசீலித்தும் தக்க பரிசுகள் வழங்கி வருகின்றது,

தாயுமானவர் பாடல்கள் முழுமையும் மனனம் செய்து தேர்ச்சி பெற்றவர்கள் தொடர்ந்து யோகாசன ஆலயப் பணிகளில் ஈடுபடுவாராயின் ஆலயப் பிரச்சாரகராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

ஆலயப் பிரிவுகள்

I. மகளிர் பிரிவு

செயலர்: செல்வி R. சாந்தி, B.Sc.,
துணைச் செயலர்: திருமதி விலாசவதி கந்தசாமி
அமைப்பாளர்: திருமதி இராஜம்மாள் நரசிம்மலு

1. வேதாந்த வகுப்பு:—பிரதி திங்கள் இரவு 7 மணி. அருள்மிகு சேணியம்மன் கோவில், சிங்காரத் தோட்டம், 7-வது சந்து, சென்னை-21.
2. இசை வகுப்பு:—(1) பிரதி வியாழன் மாலை 6 மணி, எண் 29, கப்பல்போலு செட்டி தெரு, சென்னை-21.
   (2) பிரதி வெள்ளி மாலை 6 மணி, ஷ சேணியம்மன் கோவில். இவ் வகுப்பைத் திருமதி இராஜேஸ்வரி மருதை அவர்கள் 20—1—78ல் தொடங்கிவைத்து, குத்து விளக்கு ஒன்று அன்பளிப்பாக வழங்கினர்.
3. தியான வகுப்பு:—பிரதி சனி இரவு 7 மணி. ஷ சேணியம்மன் கோவில்.
4. யோகாசன வகுப்பு:—பிரதி சனி மாலை 5 மணி. எண் 17, லாயர் சின்னதம்பி முதலி தெரு. சென்னை-21.
5. கதை வகுப்பு:—பிரதி ஞாயிறு இரவு 7 மணி. ஷ சேணியம்மன் கோவில்.
6. பிரச்சார வகுப்பு:—பிரதி ஞாயிறு இரவு 6-30 மணி. அருள்மிகு சித்தி விநாயகர் துர்கா லட்சுமி கோவில், சென்னை-21. இவ் வகுப்பை 15—10—78 அன்று திருமதி இராஜம்மாள் நரசிம்மலு தலைமையில் திருமதி பாலகிருஷ்ண வடிவு தொடங்கி வைத்தார்கள்.
7. நூல் நிலையம்:—நூல்நிலையத்திலுள்ள நூல்கள் 600.

II. வட சென்னை

அமைப்பாளர் : திரு. பி. வெங்கடேசன்,

நிருவாக அங்கத்தினர்கள் : திரு. S.K. மலைக்கனி, திரு. V. நரசிம்மலு.

1. வேதாந்த வகுப்பு :—பிரதி செவ்வாய் இரவு 7 மணி. அருள்மிகு கோதண்டராமர் கோவில், பேரம்பாலு செட்டி தெரு, சென்னை-21

(2) பிரதி புதன் இரவு 7 மணி. அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், லிங்கிசெட்டி தெரு, சென்னை-1

(3) பிரதி வெள்ளி இரவு 7 மணி. அருள்மிகு தட்சிணா மூர்த்தி கோயில், சென்னை-21

2. யோகாசன வகுப்பு :—(1) பிரதி ஞாயிறு காலை 6-30 மணி ஷ தட்சிணாமூர்த்தி கோயில்.

(2) பிரதி ஞாயிறு காலை 6-30 மணி நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபம், 194, T.H. ரோடு, சென்னை-21

3. கதை வகுப்பு :—பிரதி வியாழன் இரவு 7 மணி. அருள்மிகு மன்னார்சாமி கோயில், இராயபுரம், சென்னை-13

4. பௌர்ணமி வகுப்பு :—பிரதி பௌர்ணமி இரவு 7 மணி ஷ மன்னார்சாமி கேயில்.

5. தியான வகுப்பு :—மாதம் இருமுறை; ஞாயிறு மாலை 3 மணி எண் 21, பரமானந்த முதலி தெரு, ஏழுகணறு, சென்னை-1

6, இசை வகுப்பு :—பிரதி ஞாயிறு மாலை 5 மணி. எண் 21, முத்தையா முதலி தெரு, சென்னை-21

III. தென் சென்னை

செயலர் : திரு. T. S. கலியாணசுந்தரம்,

நிருவாக அங்கத்தினர்கள் ; திரு. K. காமாட்சிநாதன்,
திரு. M. லோகநாதன்.

1. வேதாந்த வகுப்பு :—(1) பிரதி ஞாயிறு இரவு 7 மணி. அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் கோவில், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

(2) பிரதி திங்கள் இரவு 7 மணி அன்னதான சமாஜம், புரசைவாக்கம், சென்னை-7.

2. யோகாசன வகுப்பு :—(1) பிரதி ஞாயிறு காலை 6-30 மணி. ஷ ஆதிபுரீஸ்வரர் கோவில்

(2) பிரதி ஞாயிறு காலை 6-30 மணி. ஷ அன்னதான சமாஜம்.

3. வேள்விப் பயிற்சி வகுப்பு :—பிரதி மாதம் கடைசி ஞாயிறு காலை 10 மணி. ஸ்டுடியோ சோமநாத், எண் 5, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம் சென்னை-84.

4. பௌர்ணமி வகுப்பு:—பிரதி மாதம் பௌர்ணமி இரவு 7 மணி எண் 17, வள்ளுவன் தெரு, புரசைவாக்கம், சென்னை.

5. தையற் பயிற்சி வகுப்பு:—பிரதி திங்கட்கிழமை, எண் 24, ஷாவாலஸ் காலனி, ஆதம்பாக்கம், சென்னை-88,

IV. கோடம்பாக்கம், செங்கற்பட்டு பிரிவுகள்

மேற்பார்வை, நிருவாக அங்கத்தினர் திரு. R. மேஹர்பாபு M.A., B.T.

1, வேதாந்த வகுப்பு:—(1) பிரதி சனி இரவு 6-30 மணி. யோகாசன ஆலயம், எண் 7, வன்னியர் முதல்தெரு, சூளைமேடு, சென்னை-94

(2) பிரதி ஞாயிறு மாலை 3 மணி. எண் 23, சின்னமணியக்கார தெரு, செங்கற்பட்டு.

(3) பிரதி ஞாயிறு இரவு 7 மணி. அருள்மிகு சுந்தர விநாயகர் கோவில், சின்னநத்தம், செங்கற்பட்டு.

(4) பிரதி வெள்ளி மாலை 3 மணி. எண் 3, பெரிய ரத்தினத் தெரு, பெரிய நத்தம், செங்கற்பட்டு.

2. வேள்விப் பயிற்சி வகுப்பு:—(1) பிரதி மாதம் இரண்டாவது ஞாயிறு காலை 10 மணி. ஷை யோகாசன ஆலயம், சூளைமேடு.

(2) பிரதி மாதம் மூன்றுவது ஞாயிறு காலை 10 மணி. பெரிய நத்தம். செங்கற்பட்டு.

3. யோகாசன வகுப்பு:—பிரதி ஞாயிறு காலை 6-30 மணி. ஷை யோகாசன ஆலயம், சூளைமேடு.

4. பௌர்ணமி வகுப்பு:—(1) பிரதி மாதம் பௌர்ணமி இரவு 7 மணி. ஷை யோகாசன ஆலயம், சூளைமேடு.

(2) அருள்மிகு சுந்தர விநாயகர் கோவில், சின்னநத்தம், செங்கற்பட்டு.

V. ஆவடி பிரிவு

மேற்பார்வை; நிருவாக அங்கத்தினர் திரு. M. செங்கல்வராயன் B.Sc., D.M.I.T., D.O.O.P. (P.U.)

1. வேதாந்த வகுப்பு:—பிரதி சனி இரவு 6-30 மணி. ஸ்ரீ பால முரளி கிருஷ்ண மந்திர, H.V.F. எஸ்டேட், ஆவடி, சென்னை-54.

2. யோகாசன வகுப்பு:—பிரதி ஞாயிறு காலை 6-30 மணி. ஷை முரளி கிருஷ்ண மந்திர்.

VI. விருதுநகர் (முகவூர், மதுரை) பிரிவு

செயலர்: திரு. M. P. A. S. நடராஜன்

மகளிர் பிரிவு செயலர்; திருமதி K. மகமாயி அம்மாள்.

1. வேதாந்த வகுப்பு:—(1) பிரதி திங்கள் இரவு 6-30 மணி. எண் 26, K. E. S. கிட்டங்கி தெரு, விருதுநகர்.

(2) பிரதி ஞாயிறு காலை 10 மணி. எண் 263, இராமமூர்த்தி தெரு, விருதுநகர்.

(3) பிரதி ஞாயிறு மாலை 6 மணி. ஸ்ரீ காமராஜ் நினைவு மண்டபம், சுலோசன நாடார் தெரு, விருதுநகர்.

2. இசை வகுப்பு:—பிரதி வியாழன் மாலை 3-30 மணி. எண் 26. K. E. S. கிட்டங்கி தெரு, விருதுநகர்.

3. தியான வகுப்பு:—பிரதி சனி மாலை 6 மணி, எண் 26, K. E. S. கிட்டங்கி தெரு, விருதுநகர்.

நூல் நிலையம்

இவ்வாண்டு நூல் நிலையத்தில் உள்ள நூல்கள் 1600

யோகாசன ஆலய விஜயம்

திங்கள் இதழான இப்பத்திரிகை தொடங்கி 31 ஆண்டுகள் நிறைவு பெற்றன. இதில் மகரிஷி தாயுமானவர் பாடலுக்கு விளக்கவுரையும், ஆங்கிலக் கட்டுரைகளும், வைத்தியரத்தினம் உயர்திரு. V. பலராமய்யா (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) அவர்களின் சித்தர் மருத்துவக் கட்டுரையும் இடம் பெறுகின்றன. ஆசிரியர். வெளியிடுபவர், பிரசாரகர் திரு. N. குருலிங்கம் 25—7—78 வரை. பின்னர், ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார். வெளியிடுபவர், திரு. அருண் குமார் N .படேல்.

பொதுக் கூட்டங்கள்

1. 38-வது ஆண்டு விழா: 14—1—78 மாலை 5 மணிக்குச் சென்னை வண்ணையம்பதி நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில், ஓய்வு பெற்ற நீதிபதி உயர்திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. இந்தியா மெடல்ஸ் அதிபர் உயர்திரு. S. மருதை அவர்கள் சிறப்புரையாற்றினர்.
2. ஆத்மயோகம் 21: ஆவடி வைஜயந்தா நர்சரி பள்ளியில் 26—1—78 காலை 10 முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.
3. தாயுமானவர் திருநாள்: 14—4—78 மாலை 5-30 மணிக்கு உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் தலைமையில் மேற்படி நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திரு. M. K. பாலசுப்பிரமணியன் I.A.S. (Com. Hindu Religious and Charitable Endowments Board) அவர்கள் சிறப்புரையாற்றினர். தாயுமானவர் பாடல் முழுமையும் ஒப்புவித்த திரு. V. அருணாசலம் (Dy. Superintendent of Central Excise, Retired) அவர்களுக்கு உயர்திரு மணலி. இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் தங்கப்பதக்கம் பரிசு வழங்கினர்.
4. ஆத்மயோகம் 22: 15—8—78-ல் சிந்தாதிரிப் பேட்டை புது பங்களா தெரு, எண். 13. இந்து அலுவலகத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் காலை 10 முதல் மாலை 4-30 மணி வரை நடைபெற்றது.
5. ஆவணி அவிட்டத்திருநாள்: 18—7—78 காலை 9 மணிக்கு நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் வேள்வியுடைய பூணூல் அணியும் சடங்கும் நிகழ்ந்தது.

6. யோகாசன ஆலய விஜயம் 31வது ஆண்டுவிழா: 2—10—78 மாலை 6-30 மணிக்கு நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது..
7. கார்த்திகைப் பௌர்ணமி தீப விழா:- 14—12—78 மாலை 5-30 மணிக்கு நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது.

சிறப்புக் கூட்டங்கள்

3—9—78 மாலை 6 மணிக்குச் சென்னை இராயபுரம் மன்னார்சாமி கோவிலில், செய்தி, சுற்றுலா, அறநிலையத் துணை அமைச்சர் மாண்புமிகு ஐசரிவேலன் அவர்களும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் மணிமாறன் அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

10—10—78 மாலை 5 மணிக்குச் சென்னை வண்ணையம்பதி முத்தையா முதலி தெரு இசைப் பிரிவில் சரஸ்வதி பூஜை விழா நடைபெற்றது. மாணவ மாணவியர் நிகழ்த்திய இவ்விழாவுக்கு உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்தார்.

விருதுநகர் ஸ்ரீ வால சுப்பிரமணிய சுவாமி கோவிலில், கீழ்க் காணும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன,

5—3—78 காலை 10 மணிக்கு உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் வள்ளித் திருமணம் வேதாந்த உரை நிகழ்த்தினார்கள். 7—5—78 மாலை திரு. T. M, M. இராஜாக்கனி நாடார் அவர்கள் தலைமையில், திருமதி. அனுசூயா பாலகிருஷ்ணன் M. A., B. T. அவர்கள் தாயுமானவர் பாடலுக்கு விளக்கவுரையும், 25—6—78 மாலை திரு. V. V. V. ஆனந்தம அவர்கள் தலைமையில், திருமதி. ஜெயலட்சுமி விவேகானந்தர் அவர்கள் தாயுமானவர் பாடல் விளக்க வுரையும், நிகழ்த்தினார்கள். 6—8—78 இரவு 6 மணிக்கு அருள்மிகு காளியம்மன் கோவிலில் திரு. T. M. M. இராஜாக்கனி நாடார் அவர்கள் தலைமையில், உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் "சிவக்கூத்து" என்ற பொருளில் பேருரை ஆற்றினார்கள். 27—8—78 இரவு 7 மணிக்குத் திரு. M. S. P. சண்முகவேல் நாடார் தலைமையில் திருமதி. தி. சுந்தரம்மாள் M.A. அவர்கள், தாயுமானவர் பாடலுக்கு விளக்கவுரை பகர்ந்தனர். 10—9—78 இல். திரு. O.M.S.S, சுந்தர மகாலிங்க நாடார் தலைமையில் உயர்திரு சுவாமி அவர்களின் அருளுரையும், 10—12—78 இரவு திரு. V, V. S. பாண்டுரங்கன் அவர்கள் தலைமையில் திருமதி. நாகலட்சுமி மோகன் அவர்கள் இன்பநிலை என்னும் பொருளில் சிறப்புரையும் ஆற்றினார்கள்.

முகவூர் கிளையில் 28—5—78 காலை 9 மணிக்குத் திருமதி. K. மகமாயி அம்மாள் "பக்தி" என்ற பொருளிலும், திருவாளர் S. முருகேச பாண்டியன் B. E., "இந்து தருமம்" என்ற பொருளிலும் சிறபபுரை ஆற்றினார்கள். 8—8—78 காலை 9 மணிக்கு உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் "மனோதத்துவ" விளக்கவுரை நிகழ்த்தினார்கள்,

மதுரை: அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் ஆடி வீதியிலுள்ள திருப்புகழ் மண்டபத்தில் செப்டம்பர். 12, 13, ஆகிய இரு நாள்களிலும் சுவாமிகள் சிறப்புரை நிகழ்த்தினார்கள்,

இந்து தர்ம பிரச்சாரம்

28—2—78-ல் தூத்துக்குடி சச்சிதானந்த சபையிலும், 3—3—78-ல் இராஜபாளையம் அருள்மிகு குருஸ்வாமி கோவிலிலும், 10—3—78-ல் விருதுநகர் இந்து சமய வளர்ச்சிக் கழகத்திலும், 2—8—78-ல் விருதுநகர் அன்னை கஸ்தூரிபாய் காந்தி சேவா சங்கத்திலும் உயர்திரு கோ. மு, சுவாமி அவர்களின் பிரசாரம் நடைபெற்றது.

திரு. பி. வெங்கடேசன் அவர்கள் 26—4—78-ல் விருதுநகர் இந்து சமய வளர்ச்சிக் கழகத்திலும், சென்னை திருவொற்றியூர் திருக்கோவிலில் 31—10—78 வடிவுடையம்மன் அடியார் சபையிலும், 20—12—78 அன்று சென்னையில் நடை பெற்ற தென்னிந்திய அர்ச்சகர்கள் மாநாட்டிலும் பேசினர்.

10—7—78-ல் ஆற்காட்டில் நிகழ்ந்த மாணிக்கவாசகர் குருபூஜை விழாவில் திரு. N. குருலிங்கம், திரு. மு. முனிரத்தினம் ஆகியோர் பிரச்சாரம் நிகழ்த்தினர்.

திருமதி. M. வசுந்தராதேவி அவர்கள் 28—5—78-ல் இராஜபாளையம் அருள்மிகு குருஸ்வாமி கோவிலிலும், 1—6—78-ல் விருதுநகர் அன்னை கஸ்தூரிபாய் காந்தி சேவா சங்கத்திலும் சமயப்பிரசாரம் நிகழ்த்தினர்.

புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் 6—9—78-ல் சென்னை நாராயணப்ப நாய்க்கன் தோட்டம் 6-வது சந்து, விநாயகர் கோவிலிலும், 3—11—78-ல் சென்னை தங்கசாலைத் தெரு சண்முகானந்த சபை கந்தர்சஷ்டி விழாவிலும் உரையாற்றினர்.

திரு. T. S. கலியாணசுந்தரம், திரு. M. லோகநாதன் ஆகியோர் சென்னை பாலமந்திர் குழந்தைகளுக்கும், திரு. S. ஆடல் அழகன் அவர்கள் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் யோகாசனப் பயிற்சி யளித்தனர்.

மார்கழித் திங்கள் வழிபாட்டு விழா

16—12—78 காலை 6 மணிக்குச் சென்னை வண்ணை, பேரம்பாலு செட்டி தெரு அருள்மிகு கோதண்டராமர் கோவிலில், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. இராமசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், நிலக்கிழார் திரு. K, முத்துக்கிருஷ்ண செட்டியார் அவர்கள் திருவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். 13—1—79 வரை விழா தொடர்ந்து நடைபெற்றது. 9—1—79 வைகுண்ட ஏகாதசி நள்ளிரவு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

சிறப்புக் கூட்டங்கள்

மார்கழிச் செவ்வாய் சிறப்புக் கூட்டங்கள் 19—12—78, 26—12—78, 2—1—79, 9—1—79 ஆகிய நாள்களில் நடைபெற்றன. திருமதி ஞான சௌந்தரி (முருகதனுஷ்கோடி மேல் நிலையப்பள்ளி, சென்னை) தலைமை

யாசிரியை, உயர்திரு, கோ. மு. சுவாமி (தலைவர். யோகாசன ஆலயம். திருக்குறள் வி. சங்கரன் செட்டியார், டாக்டர் அவ்வை. து. நடராஜன்) (தமிழ்நாடு அரசு, மொழி பெயர்ப்புத்துறை இயக்குனர்) ஆகியோர் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தனர்.

அங்கத்தினர் பொதுக்கூட்டம்

10—12—78 மாலை 5 மணிக்குச் சென்னை வண்ணை அருள்மிகு சித்தி விநாயகர்துர்கா லட்சுமி கோவில் மண்டபத்தில் மகளிர் அங்கத்தினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

24—12—78 மாலை 5-30 மணிக்குச் சென்னை வண்ணையம்பதி இராமா நாய்க்கன் திருமண மண்டபத்தில் ஆலய அங்கத்தினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிகளுக்கு உதவியவர்கள்

புகைப்படம்: திரு. M லோகநாதன் (உரிமையாளர். ஸ்டுடியோ சோமநாத்: சென்னை-84).

ஒலிபெருக்கி: திருவாளர்கள் C. சுந்தரேசன், கணேஷ்பாபு சாரங்கன், சண்முகம் ஆகியோர்.

இடவசதி அளித்தவர்கள்: உயர்திரு சேதுராமன், B Com., B.I C.A., L.L.B. அவர்கள், சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை எண் 194, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தையும், உயர்திரு திருக்குறள் V. சங்கரன் செட்டியார் அவர்கள், திருவொற்றியூர் நெடுஞ்சாலை எண் 461-A இராமா நாய்க்கன் திருமண மண்டபத்தையும், திருவாளர்கள் கிருபால் முதலியார், இராமகிருஷ்ண முதலியார் ஆகியோர் சென்னை புரசை அன்னதான சமாஜத்தையும், திருவாளர்கள் P. கந்தசாமி செட்டியார், N. முனுசாமி செட்டியார் அவர்கள் சென்னை, வண்ணை, ஸ்ரீ சித்தி கணேசர் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஸ்ரீ துர்கா லக்ஷ்மி தேவஸ்தான மண்டபத்தையும் நிகழ்ச்சிகள் நடைபெற உதவினர்.

Lions Club அன்பளிப்பு: சென்னை பெரம்பூர் லயன்ஸ் கிளப் சங்கத்தினர், யோகாசனப் பயிற்சிக்காக 17 பெட் ஷீட்டுகள் வாங்க ரூ. 300/- வழங்கினர்.

பத்திரிகைகள்: "யோகாசன ஆலய விஜயம்" இதழுக்கு மாற்றுப் பிரதியாக வந்த பத்திரிகைகள்; 1. இராமகிருஷ்ண விஜயம், 2. ஆத்ம ஜோதி, 3. சிவத் தொண்டன், 4. அன்பொளி, 5. Divine Life, 6. Yoga Life, 7. Yuva Bharathi ஆகியவை.

யோகாசன ஆலயம்

1978ம் ஆண்டின் கையிருப்பு விபரம்

எண்	தலைப்பு	1—1—1978 கையிருப்பு	1978ம் ஆண்டின் வரவு	31—12—1978 கையிருப்பு
1	கட்டிட நிதி	25.000—00	15,532—10	40,532—10
2	சந்தா/நன்கொடை	139—73	1,123—89	1,263—62
3	யோ. விஜயம்		2,100—83	2,100—83
4	தாயுமானுர்/யோகாசன புத்தக விற்பனை ...	...	1,418—00	1,418—00
		25,139—73	20,174—82	45,314—55

C. இராமசுவாமி,
பொதுச் செயலர்.

J. ஹரிஹரகிருஷ்ணன்,
கணக்குப் பரிசோதகர்-

V. A, பழநிராஜ்,
பொருளாளர்.

7, வன்னியர் முதல் தெரு சூளைமேடு, சென்னை-600 094

அறிவிப்பு!

"யோகாசன ஆலய விஜயம்'

சந்தாதாரர்க்கு

பேரன்புடையீர்!

அச்சிடும் பேப்பர், மை, ஆட்கூலி விலை உயர்வால் உயர்ந்த அச்சகச் செலவை ஈடு செய்ய இயலாமையினால் 1979 ஜனவரி மாதம் முதற் கொண்டு பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டுள்ளது;

தனி இதழ் 50 காசு ஆண்டு சந்தா ரூ 5

(ஆயுட் சந்தா வழக்கம் போல் ரூ 50 மட்டுமே)

எப்போதும் போல அன்பர்கள் பேராதரவு தந்து சந்தாவைப் புதுப்பித்தும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் இறைபணியில் ஈடுபட வேண்டுகிறோம்

குறிப்பு:—பிரதி ஆங்கில மாதம் 25ந்தேதி அஞ்சலகத்தில் விஜயம் சேர்க்கப்படுகிறது. ஐந்து நாள்களுக்குள் விஜயம் கிடைக்காவிடில் அன்பர்கள் உடன் தெரிவிக்கவும்,

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:

அருண்குமார் N. படேல், (வெளியிடுபவர்)
"யோகாசன ஆலய விஜயம்"
462, T. H. ரோடு, சென்னை-600 021,

S. கண்ணப்பன், மேனேஜர்.

Published by Sri Arun Kumar N. Patel, 462, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Editor Pulavar Sri B. Alwar, 464, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600 001.
January-1979